# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## 2017 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆம் திகதிய
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2017.05.08 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு (திருத்தம்)

**2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நீதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது.*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2*** : *இவ்வாசகம், 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் 31 ஆம் பிரிவை திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயன், குற்றச்செயல்களுக்கு பலியாக்கப்பட்ட ஒருவரை அல்லது சாட்சியை இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் சேய்மை அமைவிடத்திலிருந்து சாட்சியம் வழங்குவதற்கு அல்லது கூற்றொன்றினைச் செய்வதற்கு இயலச்செய்வதாகும்.*

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும்
சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு
(திருத்தம்)

ச. வ. ஓ. 48/2016

**2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2.** 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் 31 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''இலங்கைக் குள்ளிருக்கும்'' என்னும் சொல்லுக்குப் பதிலாக "இலங்கைக்குள்ளிருக்கும் அல்லது வெளியிலிருக்கும்", என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும்:-

''(1அ) எவரேனும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் ஏதேனும் சாட்சியம் அல்லது கூற்று (1) ஆம் உட்பிரிவின்கீழ் இலங்கைக்கு வெளியே உள்ள ஏதேனும் சேய்மை அமைவிடத்திலிருந்து பதிவுசெய்யப்படுமிடத்து, அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி எந்த நாட்டிலிருந்து சாட்சியமளிக்க அல்லது கூற்றினைச் செய்ய நாடுகின்றாரோ அந்த நாட்டிலுள்ள இலங்கை இராஜதந்திர பணியகத்தில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்குவதுடன், அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக -

(அ) "நீதிமன்றம்" என்பது, எந்த நீதிமன்றத்தின் முன்னர் எவையேனும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் நடாத்தப்படுகின்றனவோ அந்நீதிமன்றம் என்று பொருள்படும்; அத்துடன்

(ஆ) "பகிரங்க அலுவலர்" என்பது, இலங்கை வெளிநாட்டுச் சேவையில் சேவையாற்றும் அலுவலரொருவரை உள்ளடக்கும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**3.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 :* (வெளிநாடு) *ரூபா 1,849 :* ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், *அரசாங்க தகவல் திணைக்களம்,* இல. *163, கிருலபனை மாவத்தை,* பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்